**கவனிக்க** .- 2026.05.15ஆந் திகதிய இல. 2489 ஆம் இலக்க , இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பகுதி IV (அ) பிரசுரிக்கப்பட்டவில்லை

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2490- 2026 මැයි මස 22 වැනි සිකුරාදා - 2026.05.22

2490ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 72 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, யூன் மாதம் 12ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, மே மாதம் 29ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர் .

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.


71- B 82794 - 403 (2026/05)

# நானாவித அறிவித்தல்கள்

## அறிவித்தல்

### கொழும்பில் நடைபெறும் மேல் மாகாண வணிக மேல் நீதிமன்றத்தில் ( தமது குடியியல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும்)

வழக்கு இலக்கம் : CHC /18/2026/ CO
தன்மை : ஒடுக்குதல்( கம்பனி)

இல. 150, ஹிரும்புற வீதி, காலியில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை உடைய சின்ஹ கெபிடல் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட் (P.B. 214009) எனும் நிறுவனத்தை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்டதன் படி) 270 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அதன் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு செய்வதற்கான முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பம் தொடர்பானது.

எஸ்.ஏ.டி. சிறிவர்தன
இல.1272, ராஜமல்வத்த வீதி, பத்தரமுல்லை.

*மனுதாரர்*

கொழும்பில் தமது குடியியல் அதிகாரத்தை நடைமுறைப்படுத்தும் மேல் மாகாண மேல் நீதிமன்றத்தின் மாண்புமிகு கௌரவ நீதியரசர்களுக்கு,

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி 270 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அதன் சட்டதிட்டங்களுக்கு அமைவாக மேற் குறிப்பிடப்பட்டுள்ள 'சின்ஹ கெபிடல் இன்வெஸ்ட்மென்ட் லிமிடெட்" (P.B. 214009) கம்பனியை ஒடுக்குவதற்கான உத்தரவு கோரி மேற் குறிப்பிடப்பட்டுள்ள மனுதாரரான எஸ்.ஏ.டி சிறிவர்தன என்பவரின் மூலம் 2026, மாச்சு மாதம் 23 ஆந் திகதி விண்ணப்பமொன்று இக் கௌரவ நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

குறித்த விண்ணப்பமானது 2026 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆந் திகதி மீள் அறிவிப்பிற்காகவும் மற்றும் யூலை மாதம் 01 ஆந் திகதி காலை 9.30 மணிக்கு இது தொடர்பான விசாரணைக்காகவும் புதுக்கடை, கொழும்பு 12 இல் அமைந்துள்ள 03 ஆம் இலக்க வணிக மேல் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்படுகின்றது.

அவ் விண்ணப்பம் தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந் நோக்கத்திற்காக விசாரணையின் போது தோற்ற முடியும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மனுதாரரின் சட்டத்தரணி
பெயர் :ரம்ஸி பாச்சா அஸோசியேட்ஸ்
முகவரி :இல.367 3/1, டேம் வீதி, கொழும்பு 12
தொலைபேசி : 0112 432433, 0772 650522
மின்னஞ்சல் :ramzibachaassociates@gmail.com

2026.05.22.

பதிவாளர்/பிரதி/ உதவிப்பதிவாளர்,
கொழும்பு வணிக மேல் நீதிமன்றம்.
மனுதாரரின் சட்டத்தரணிகள்.

05- 320

**பாராளுமன்றம்**

1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மஹரகம பௌத்த இளைஞர் சங்கம் ( கூட்டிணைத்தல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளை இல. 53 இன்கீழ் "1998 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க மஹரகம பௌத்த இளைஞர் சங்கம் ( கூட்டிணைத்தல் ) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்" என்ற தலைப்பில் ஒரு சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த உத்தேசிப்பதாக , தேவானந்த சுரவீர ஆகிய நான் இதன் மூலம் அறிவிக்கின்றேன். இத் திருத்தச் சட்டமூலத்தின் நோக்கம்.-

பிரதான சட்டத்திற்கான சில திருத்தங்களை அறிமுகப்படுத்துவதாகும்.

தேவானந்த சுரவீர ,
பாராளுமன்ற உறுப்பினர்.

05 -246

---

**பாராளுமன்றம்**

சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

தேவானந்த சுரவீர ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1) ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் "சிறுவர்களுக்கான மஹாவிலச்சிய கல்வி நிலையத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்" என அழைக்கப்படுகின்ற சட்டமூலமொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உத்தேசித்துள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

இச்சட்டமூலத்தின் நோக்கம் யாதெனில் பின்வரும் பொது நோக்கங்களைக் கொண்டதான அதன் நம்பிக்கைப் பொறுப்பை கூட்டிணைப்பதாகும்.-

(அ) குறிக்கோள்கள் மற்றும் எதிர்கால தொழில்வாய்ப்புக்களுக்கு இளைஞர் யுவதிகளை மிகவும் பொருத்தமான வகையில் தயார்செய்வதற்கு கற்றல் மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பேணி நடாத்துதல்;

(ஆ) தகவல் தொழில்நுட்பத் துறைசார்ந்த சேவைகளுக்கான தொழிற்பயிற்சி நிலையமொன்றை நிறுவுதல்;

(இ) பின்தங்கிய பகுதிகளிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்குதல் மற்றும் / அல்லது ஏற்பாடு செய்தல்,

(ஈ) திறன்கள் மற்றும் கற்றலை மேம்படுத்த காலத்திற்குக் காலம் தேவைப்படும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்,

ஆகியவையாகும் ;

தேவானந்த சுரவீர ,
பாராளுமன்ற உறுப்பினர்.

05 -247

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது